மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது எச்சரிக்கையாகப் பேசுவது நல்லது. தலைமை வகிப்பவரைப் பார்த்து, * * * என்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல. அந்த வார்த்தையை சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். உறுப்பினர் அவர்கள் கோர்ட்டிற்குச் சென்று, நீதிபதிகளுக்கு மதிப்பு கொடுத்துப் பேசிப் பழக்கப்பட்டவர். அதை விட ஒரு படி மேலாக இங்கே மதிப்புக் கொடுத்து பேசுவது நல்லது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir there are very important things concerning Madurai and there was some fight between the workers and other things. Therefore, I request the Chair to be more considerate in taking up issues which concern our areas........

MR. DEPUTY SPEAKER : I do not remember properly what adjournment motions have been taken up and what rulings have been given. I would like the Honourable Member to come and discuss the matter in my chamber. That will always be a very good practice. Thiru Dennis............

(4) கவனஈர்ப்பு (தொடர்ச்சி)

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் காலவரம்பின்றி ஒத்திவைக்கப் படுவது குறித்து.

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Honorable Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the indefinite postponement of the Madras Corporation elections that are due already.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த மற்றும் பதவியை நீட்டும் சட்டம்) 39-வது பிரிவின் கீழ் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 1—11—1973 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—10—1973-ல் தான் முடிவு அடைகிறது. மாநகராட்சித் தேர்தலை குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மாநகராட்சித் தேர்தலை காலவரையரையின்றி ஒத்திப் போடுவது என்ற பிரச்னை இப்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

---

*மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.